Registered as a Newspaper

# உதயன்

சுடர்: 41
கதிர்: 135

வெள்ளிக்கிழமை
10 ஏப்ரல் 2026

பங்குனி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

**தேயிலையின் விலை வீழ்ச்சி**
விரிவு பக்கம்:- 05

**தங்கத்துக்கு மீண்டும் மவுசு**
விரிவு பக்கம்:- 05

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால்

# தமிழர்களின் தீர்வுக்காக வரைவுக்குழு அமைப்பு!

கொழும்பு, ஏப்ரல் 10
ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தி, இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்கும் படியான தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதற்காக விசேட வரைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
»11



## அன்னை பூபதியின் ஊர்திப்பவனி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 10
அன்னை பூபதியின் 38 ஆம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு, அவரின் திருவுருவப் படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை
»11

## ஆடைகளைக் கலைந்து சிறுவன் மீது தாக்குதல்

சுன்னாகத்தில் கொடூரம்
சந்தேகநபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப். 10
17 வயதுச் சிறுவன் ஒருவனின் ஆடைகளைக் களைந்து அவன் மீது தாக்குதல் நடத்தியதுடன், அதை வீடியோவாகப் பதிவுசெய்த குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
»11

இரணைதீவில் கைதான

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு



கிளிநொச்சி, ஏப். 10
கிளிநொச்சி - இரணைதீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் பத்துப்பேரையும் விளக்க
»11

## லஞ்சமாக மதுப்போத்தல்; பொலிஸ் அதிகாரி கைது

தருமபுரத்தில் சம்பவம்



கிளிநொச்சி, ஏப். 10
லஞ்சமாக மதுப்போத்தல் பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர், கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.
லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான
»11

## அரசாங்கத்தைக் கவிழ்ப்பது ஒருபோதும் நடவாத காரியம்



கொழும்பு, ஏப். 10
ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எவராலும் கவிழ்க்க முடியாது என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும் என்று எதிர்க்கட்சியினர்
»11

## சகோதரன் கத்திக்குத்து; 56 வயதுப் பெண் சாவு



வவுனியாவில் துயரம்

வவுனியா, ஏப். 10
வவுனியா - செக்கடிப்பிலவு கிராமத்தில் சகோதரனின் கத்திக்குத்துத் தாக்குதலுக்கு உள்ளான சகோதரி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்
»11

## மேலும் ஒரு மாதம் அவசரகாலச் சட்டம்

எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 10
அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.
டித்வா புயலின்போது நாட்டில் அமுலுக்கு வந்த அவசரகாலச்சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. நாடாளுமன்ற அனுமதியுடன் அந்தச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்
»11

## அவசரகாலச் சட்டத்தை இனி ஏற்கவே முடியாது

கோடீஸ்வரன் எம்.பி. கண்டனம்



கொழும்பு, ஏப். 10
இலங்கையில் இனி அவசரகாலச் சட்டம் அமுலாக்கம் பெறுவதை ஏற்க முடியாது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.
நாட்டில் கடந்த நான்கு மாதங்களுக்கும் மேலாக நடை
»11

வலுசக்தி அமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; நாடாளுமன்றில் இன்று விவாதம்



கொழும்பு, ஏப். 10
வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் நடத்தப்படவுள்ளது. தரமற்ற நிலக்கரி இறக்குமதிமூலம் இடம்பெற்ற மோசடியைக் கண்டிக்கும் வகையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்
»11

முச்சந்தி முனி

"இப்பிடி ஒவ்வொரு மாதமும் நீடிச்சு நீடிச்சு ஆட்சி முடியும் வரை உந்த அவசரச் சட்டத்தை உயிரோட வைச்சிருப்பினம் கண்டியளோ"

மக்கள் ம... நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4401 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 17 20 36 42 |
| விசேட எழுத்து | L |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1468 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 19 45 46 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0427 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 7 8 7 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2507 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 29 33 46 75 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6159 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 8 0 0 1 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2189 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 07 23 30 33 |
| விசேட எழுத்து | X |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0275 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 34 |

# போதைச்சாரதிகள் மீது கடும் சட்டநடவடிக்கை!

## பொலிஸார் எச்சரிக்கை

**கொழும்பு, ஏப்.10**

**பண்டிகைக் காலத்தில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக, கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று போக்குவரத்துப் பாவனை மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சேனாதீர தெரிவித்துள்ளார்.**

பண்டிகைக் காலங்களில் ஏற்படும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக எவ்வித பாரபட்சமுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை பண்டிகைக் காலத்தில் ஒரு சிறிய வாகன விபத்து இடம்பெற்றாலும் கூட, அதில் சம்பந்தப்பட்ட சாரதிகள் உடனடியாகப் போதைப் பொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

வீதிப் பாதுகாப்பைப் பேணும் வகையில் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும். பண்டிகைக் காலங்களில் வீதிகளில் ஏற்படும் நெரிசலைக் குறைக்கவும், உயிரிழப்புகளைத் தவிர்க்கவும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் விசேட கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0867 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 6 4 3 4 9 8 |

**Super Ball**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3133 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 12 25 40 59 |

**சனிதா**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 17 63 74 77 |
| வெற்றி வாரம் | 5294 |

**SASIRI**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0963 |
| வெற்றி இலக்கம் | 12 35 50 |

**லக்ன ராசி**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| | துலாம் |
| வெற்றி இலக்கம் | 08 11 33 45 |
| சீட்டிழுப்பு வாரம் | 4845 |

**KAPRUKA**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கம் | 06 09 20 24 |
| வெற்றி வாரம் | 2309 |

**அத கோடிபதி**

| | |
|---|---|
| திகதி | 09.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 12 44 45 58 |
| வெற்றி வாரம் | 2959 |

## கஞ்சா செடிகள் தீயிட்டு அழிப்பு

கொழும்பு, ஏப்.10

எதிமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்டயால சரணாலயப் பகுதியில் பயிரிடப்பட்டிருந்த இரண்டு பாரிய கஞ்சாத் தோட்டங்களைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்றுகையிட்டனர்.

சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த ஒரு இலட்சத்து அறுபதாயிரம் கஞ்சா செடிகள் இதன்போது கண்டுபிடிக்கப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட கஞ்சா செடிகளிலிருந்து நீதிமன்ற நடவடிக்கைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்ட பின் ஏனையவை அவ்விடத்திலேயே தீயிட்டு அழிக்கப்பட்டன.


சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்காக எதிமலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-41)

## அண்மைய இயற்கை இடர்களால் 3,74,000 தொழிலாளர்கள் பாதிப்பு

கொழும்பு, ஏப்.10

இலங்கையில் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம்மற்றும்மண்சரிவுகாரணமாக, சுமார் 3 இலட்சத்து 74 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு சில மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. இதனால் மாதத்துக்கு சுமார் 48 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான இழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது. நெற்பயிர்ச் செய்கை நிலங்களில் 23 சதவீதமானவை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. தேயிலை உற்பத்தி சுமார் 35 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இதில் மொத்த உற்பத்தியில் 70 சதவீத பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை எரிபொருள் நெருக்கடி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என இருமுனைச் சவால்களை எதிர்கொண்டுள்ள தொழிலாளர் துறையைப் பாதுகாப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருகின்றது. (க-இ)

## மருத்துவ அதிகாரிகள் திடீர் பணிப்புறக்கணிப்பு



கொழும்பு, ஏப்.10

நாடு தழுவிய ரீதியில் நேற்றுக் காலை 8 மணி முதல் 48 மணித்தியாலங்கள் மருத்துவ அதிகாரிகள் திடீர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர். உள்ளகப் பயிற்சி பெற்றவர்களுக்கான மருத்துவ நியமனங்கள் அறிவிக்கப்பட்ட முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சுமார் 436 புதிய மருத்துவ அதிகாரிகளுக்கான சேவை இடங்கள், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சுகளால் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தன. இந்த நியமனங்கள் வழங்கப்பட்ட முறைமையில் உள்ள முரண்பாடுகள் மற்றும் அதிருப்தி காரணமாகவே திடீர் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, கடந்த வாரத்திலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், பல சந்தர்ப்பங்களில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தது. மருத்துவர்களின் தொடர் போராட்டங்களால் நோயாளர்களே பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (க-இ)

## புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக பொலிஸார் நிதி சேகரிக்க முடியாது

கொழும்பு, ஏப்.10

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக, நிதி சேகரிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபரால், அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் விசேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு, பல பொலிஸ் நிலையங்களில் புத்தாண்டு உபசரிப்புகளை நடத்துவதற்காக உத்தியோகத்தர்களிடம் நிதியைச் சேகரிக்கத் தயாராகி வருவதாகவும், வர்த்தக சமூகத்தின் பங்களிப்புடன், புத்தாண்டு விருந்துகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் கிடைத்த தகவலை அடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

விசேடமாக, சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில், அன்பளிப்புப் பொதிகள் மற்றும் பரிசு வவுச்சர்களை வழங்கமுடியாது. சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் அத்தகைய பொருள்களைப் பொறுப்பேற்கக்கூடாது. பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் புத்தாண்டு உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக, ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு 250 ரூபா வீதம் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்த அறிவுறுத்தலை மீறிச் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் மேற்பார்வை அதிகாரிகளுக்குப் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நெருக்கடிகளால் வேலையிழப்பு உருவாகவில்லை

## தொழில் அமைச்சு தகவல்

**கொழும்பு, ஏப்.10**

**நாட்டில் நிலவும் எரிபொருள்கள் நெருக்கடி காரணமாக தற்போது வரை வேலைவாய்ப்பு எதுவும் இழக்கப்பட வில்லை என்று தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

எரிபொருள்கள் நெருக்கடியால் தொழிற்சந்தையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து தேசிய தொழில் ஆலோசனைச்சபையில் ஏற்கனவே விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தற்போது வரை வேலை இழப்புகள் எதுவும் பதிவாகவில்லை. எனினும் முதலாளிகள் மற்றும் ஊழியர் தரப்புடன் இணைந்து எதிர்கால நிலைமைகளைச் சமாளிப்பதற்கான திட்டங்கள் தொடர்பாக அமைச்சு தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## திடீர் மின்சாரத்தடைக்கு எதிராக சட்டநடவடிக்கை?

கொழும்பு,ஏப்.10

நாட்டின் பல பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட மின்சாரத்தடை தொடர்பாக, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மின்சார நுகர்வோர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சஞ்சீவ தம்மிக கோரிக்கை விடுத்துள்ளார்.

24 மணித்தியாலமும் மின்சாரத்தைத் தடையின்றி வழங்குவதாக உறுதியளித்தே மின்சாரக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. எனவே, தடையின்றி மின்சாரத்தை வழங்க முடியாவிட்டால், அதிகரிக்கப்பட்ட கட்டணங்களை மீண்டும் திருத்தவேண்டும்.

திங்கட்கிழமை ஏற்பட்ட மின்வெட்டானது சாதாரண தொழில்நுட்பக்கோளாறு அல்ல. இவ்வாறான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பதை அதிகாரிகள் முன்கூட்டியே கணித்து அதற்கேற்பத் திட்டமிட்டிருக்க வேண்டும்.

திவுலபிட்டிய, கட்டுநாயக்க, கட்டான, அத்துருகிரிய மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் சுமார் ஒரு மணித்தியாலம் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால் மருத்துவமனை சேவைகள், மாணவர்களின் கல்வி மற்றும் சுயதொழில் என்பன கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்த விவகாரத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க-இ)



## வலம்புரிச்சங்குடன் சந்தேகநபர் கைது

களுத்துறை, ஏப்.10

வலம்புரிச்சங்கு ஒன்றை 35 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற சந்தேகநபர் ஒருவரை களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை களுத்துறை பேருந்து டிப்போவுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவராவார். மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்குப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-41)

## ஆபத்தை எதிர்நோக்கும் இலங்கை வாகனத்துறை

கொழும்பு, ஏப்.10

இலங்கையின் வாகனத்துறை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பான அச்சம் காரணமாக பெரும் பின்னடைவைச் சந்திக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற புதிய வாகன அறிமுக நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கியா மோட்டார்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் மகேன் தம்பையா இந்த எச்சரிக் [illegible]க்குள்ளார். கையை வ[illegible]

அவர் மேலும் தெரிவித்துள்ளதா[illegible] அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 310 இலிருந்து 320 ஆக அதிகரித்துள்ளதால், வாகன இறக்குமதி விலைகள் பெருமளவு உயரும். உதாரணமாக, 30,000 டொலர் பெறுமதியான ஒரு வாகனத்தின் விலை சுமார் 10 இலட்சம் ரூபாவால் அதிகரிக்கக்கூடும்.

வாகன இறக்குமதி மீள ஆரம்பிக்கப்பட்டபோது காணப்பட்ட ஆர்வம் தற்போது குறைவடைந்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 55,365 ஆக இருந்த புதிய வாகனப்பதிவுகள் பெப்ரவரி மாதம் 51,682 ஆகக் குறைந்துள்ளன- என்றார். (எ-இ)

## வயோதிபப் பெண் படுகொலை

கொழும்பு, ஏப்.10

தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வானேகம பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் தம்புத்தேகம, மல்வானேகம பகுதியைச் சேர்ந்த 82 வயதுடையவர். தனிப்பட்ட தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவராக உயிரிழந்த பெண்ணின் [illegible] 23 வயதுடைய பேரனே கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைத் தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-41)




## ஏறினால் இறங்காது

**நாய்க்கு எங்க எறிபட்டாலும் காலைத்தான் நொண்டுமாம். அதைமாதிரி என்ன பொருள் விலையேறினாலும், உடன சாப்பாட்டுக்கடையளில தேத்தண்ணியில இருந்து கொத்துரொட்டி வரைக்கும் விலையேத்திப் போட்டுத்தான் மற்றவேலை பாப்பினம். டொலர் ஏறினாலும் சாப்பாடு விலையேறும், பெற்றோல் விலை ஏறினாலும் சாப்பாட்டுக் காசு கூடும், காஸ், மா, சீனி, கறண்ட் காசு எண்டு எது ஏறினாலும் சரி, அதையே சாட்டா வைச்சுக்கொண்டு கண்ணைப்பொத்தி அடிக்கிற மாதிரி சாப்பாடுகளின்ர விலையைக் கூட்டிப் போடுவினம்.**

**இதில இருக்கிற ஆகப்பெரிய பம்பல் என்னெண்டால், நாளைக்கே அந்தச் சாமான்களின்ர விலை இறங்கினாலும், எங்கட சாப்பாட்டுக்கடைக்காரர் மட்டும் விலையைக் குறைக்கவே மாட்டினம். கூட்டினது கூட்டினது தான். 'மா தானே இப்ப குறைச்சிருக்கினம், காஸ் விலையக் குறைக்கேலையே. இப்ப காஸின்ர விலை என்னெண்டு தெரியுமோ?' எண்டு பஞ்சப்பாட்டு பாடுவினம். அதோட இன்னொரு வேலையும் உந்தச் சாப்பாட்டுக் கடைக்காரர் செய்யினம். விலையை ஏத்த ஏத்த, சாப்பாட்டின்ர அளவையும் சின்னனாக்கிப் போடுவினம்.**

**சாப்பாட்டுக்கடையள் சுத்தமா இருக்கோ, இலையான் மொய்க்குதோ எண்டு பாக்கிற அரசாங்கம், கண்ணுக்கு முன்னால நடக்கிற இந்தக் கொள்ளையடிப்பை கண்டுகொள்ளுறேலை. அரிசியையும், சீனியையும் விலை கூட்டி விக்கினமோ எண்டு பலசரக்குக் கடையளிலபாக்கிறவை, இப்பிடிக்கண்டபடிவிலையை ஏத்தி விக்கிற சாப்பாட்டுக்கடைக்காரரை எட்டியும் பாக்கிறேலை போல. அதால அவை கூட்டின விலையை, குறைக்காமல் பிறகும் ஒவ்வொரு சாமானா விலையேற, அதுக்கேத்தபடி குத்துமதிப்பாக் கணக்கைப் பார்த்து கூட்டிக் கொண்டேபோகினம்.**

**இதை நிப்பாட்டிறதுக்கு ஒரு முறையான பொறிமுறையைக் கொண்டுவரோணும். எப்பிடி எரிபொருள் விலையை உலக சந்தையின்ர விலைக்கேத்தபடி மாதக்கடைசியில கூட்டியோ, குறைச்சோ தீர்மானிக்கினமோ அப்பிடி சாப்பாட்டுச் சாமான்களின்ர விலையையும் தீர்மானிக்க ஒரு விலைச்சூத்திரம் கொண்டரவேணும். இல்லாட்டி, சனம் பாடுபட்டு உழைக்கிற காசு முழுக்கச் சாப்பாட்டுக்கடை முதலாளிமாரின்ர 'கல்லாப்' பெட்டிக்குள்ள தான் போகும் கண்டியளோ!**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






## மணிவிழா வாழ்த்துக்கள்



செல்வி **யசிந்தா பாக்கியநாதர்**
(பயிற்றப்பட்ட மனைப் பொருளியல்)

சேவை விபரம்:
- யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை - 01.09.1992 - 19.01.2014
- யா/ சில்லாலை றோ.க.த.க.பாடசாலை - 20.01.2014 - 09.04.2026

யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையில் நீண்டகாலமாக அர்ப்பணிப்பான சேவையாற்றி 10.04.2026 அன்று சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியருக்கு மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் உவகையடைகின்றோம்.

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்
யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை

(CR/47325) J-1



## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கணக்கெடுப்பில் விற்பனை எனக் காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 2026.04.29 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு யாழ் மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் 2026.04.28 ஆந் திகதி அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 590.00 செலுத்தி 2026.04.29 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு முன்னர் செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

கௌரவ முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(CR/47393) J-1


## கூட்டம்

*வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர் வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*(ச-110)*


## சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பயிலுநர் கிளை முகாமையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தில் கிளைமுகாமையாளராக பணிபுரியும் நோக்குடன் கிளைமுகாமையாளர் பயிற்சியினை பெற விரும்புபவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்க தலைமைக்காரியாலயத்தில் விண்ணப்பபடிவங்களை பெற்று பின்வரும் நிபந்தனைகளுக்கமைய எதிர்வரும் 20.04.2026இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை "தலைவர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிபந்தனைகள்
1. க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 18-45 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. பயிற்சியை திருப்திகரமாக நிறைவு செய்பவர்களுக்கு கிளைமுகாமையாளர் பதவி வழங்கப்படும். இதன்போது சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட ஆதன. ரொக்கப்பிணையினை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.
4. கணனி அறிவு மேலதிக தகமையாக கொள்ளப்படும்.
5. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. பயிற்சி காலத்தில் நாள் ஒன்றுக்கு ரூபா 1000/- கொடுப்பனவு வழங்கப்படும்.

கண்டி வீதி, சாவகச்சேரி
10.04.2026

தலைவர்
சாவ.ப.நோ.கூ.சங்கம்
T.P - 0212270830


# யாழில் உள்ளூர் உற்பத்தியாளர் காட்சிக்கூடம் விரைவில்

யாழ்ப்பாணம், ஏப்.10

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் பொருட்டு உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்சிக்கூடம் ஒன்று விரைவில் யாழ்.நகரில் அமைக்கப்படும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திர சேகரன் தெரிவித்துள்ளார். வீரசிங்கம் மண்[illegible] பதத்தில் நேற்று ஆ[illegible]ரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப்பொருள்களின் கண்காட்சி விற்பனைக்கூடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இந்த மாவட்டக் கூட்டுறவுச்சங்கங்களின் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சிக்கூடம் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும். இதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளன. இந்தக் காட்சிக்கூடம் விரைவாக அமைக்கப்பட்டு ஜீலை மாதத்தில் அகாவ[illegible]து சாவதேச கூட்டுறவ[illegible]ா தினத்தில் திறந்துவைக்கப்படும். வீரசிங்க மண்டப வளாகத்தில் அமைக்கப்படும் இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் காட்சிக்கூடம் மூலம் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிக நன்மை பெறுவார்கள். இதன் மூலம் எமது உள்ளூர் உற்பத்தி வளத்தை அதிகரிக்கமுடியும் - என்றார்.

(எ-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கொண்டாட்டமா அல்லது கொள்கை மீள்வரைவா?

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் திசையையும், அந்த இனத்தின் அரசியல் வேட்கையையும் உலகுக்கு உரக்கச் சொன்ன 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' நிறைவேற்றப்பட்டு அரை நூற்றாண்டு காலத்தை நாம் நெருங்கிவிட்டோம். 1976 மே 14 அன்று தந்தை செல்வா தலைமையில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் ஒருமித்து எடுக்கப்பட்ட அந்தத் தீர்மானம், வெறும் ஒரு பிரகடனம் அல்ல; அது ஜனநாய கரீதியாகத் தமிழினம் தனது இறைமையைநிலைநாட்ட எடுத்த தீர்க்கமான முடிவு. 'தமிழீழம்' எனும் அரசியல் அபிலாஷையை ஒரு ஜனநாயக விருப்பமாக முன்மொழிந்த அந்த வரலாற்று ஆவணம், இன்று 50 ஆண்டுகளைக் கடந்தும் தமிழ் மக்களின் விடுதலையினதும், அரசியல் இருப்பினதும் அடிநாதமாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது. வரும் மே 30 அன்று தந்தை செல்வா அரங்கில் நடைபெறவுள்ள 50ஆம் ஆண்டு நினைவு எழுச்சி மாநாடு, இத்தகைய தொருபின்புலத்தில்தான் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தத் தீர்மானம் ஏன் நிறைவேற்றப்பட்டது என்ற வினாவுக்குப் பின்னால் ஒரு நீண்ட அடக்குமுறை வரலாறு உண்டு. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது முதல், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட திட்டமிட்ட ஓரங்கட்டல்கள், 1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும்' சட்டம், தரப்படுத்தல் முறையிலான கல்விப் பாகுபாடு மற்றும் 1972ஆம் ஆண்டு தமிழர்களின் அபிலாஷைகளை முற்றாக நிராகரித்து உருவாக்கப்பட்ட குடியரசு அரசியலமைப்பு என்பவையே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பிரசவ வலிகளாக அமைந்தன. 'இழந்த இறைமையை மீட்பது ஒன்றே தார்மீகத் தீர்வு' என்ற நிலைக்குத் தமிழினத்தைத் தள்ளியவை, அன்றைய ஆட்சியாளர்களின் பேரினவாதப் போக்குகளே. 1977 பொதுத்தேர்தலில் மக்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு வழங்கிய அதியுச்ச அங்கீகாரம் உலகம் முழுதும் ஒரு அதிர்வை உண்டுபண்ணியது.

இந்தத் தீர்மானத்தால் விளைந்த மாற்றங்கள் பலப்பல. அதுவரை சமஷ்டி கேட்டு அகிம்சைவழியில் போராடிய தமிழ்த்தலைமை, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னரே முழுமையான சுயநிர்ணய உரிமையை நோக்கி நகர்ந்தது. இதுவே பிற்காலத்தில் ஆயுதப் போராட்டத்துக்கும், சர்வதேச அரங்கில் ஈழத்தமிழர் விவகாரம் ஒரு பேசுபொருளாக மாறுவதற்கும் தார்மீக அடித்தளத்தை இட்டது. ஆனால், ஐம்பது ஆண்டுகள் கடந்த நிலையில், இந்தத் தீர்மானத்தைச் சுவரொட்டிகளிலும், விழா மேடைகளிலும் வெறும் சடங்காகக் கொண்டாடுவது ஆரோக்கியமானதா? என்ற கேள்வி எழுகின்றது. இத்தனை ஆண்டு கால ஈகங்களும், போராட்டங்களும் இன்னும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தராத நிலையில், வெறும் நினைவேந்தல்களோடு நாம் திருப்தியடைந்து விட முடியாது.

இன்றைய சர்வதேசச் சூழலில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படை அறத்தைப் பேணிக்கொண்டு, அதனை நடைமுறை ரீதியாக முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல் தலைமைகளுக்கும், புலம்பெயர் சமூகத்திற்கும் உண்டு. உலக நாடுகளின் புவிசார் அரசியல் நகர்வுகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அந்தத் தீர்மானத்தின் இறைமை சார்ந்த கோட்பாடுகளை நவீன அரசியல் மொழியில் உலகிற்கு எடுத்துரைக்கவேண்டும். வெறுமனே ஒரு மாநாட்டைக் கூட்டிவிட்டு கலைந்து செல்வதல்ல நமது பணி; மாறாக அந்தத் தீர்மானம் எதற்காக நிறைவேற்றப்பட்டதோ, அந்த அரசியல் இலக்கை ஜனநாயக வழியில் எட்டுவதற்கான ஒரு காத்திரமான செயற்றிட்டத்தை வகுப்பதே இன்றைய காலத்தின் கட்டாயம். நினைவு எழுச்சி என்பது செயலில் வெளிப்படவேண்டுமே தவிர, வெறும் கோஷங்களில் அல்ல.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின**

**பொருள்:** பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.




# இலங்கைத் தேயிலையின் விற்பனை விலை வீழ்ச்சி!



கொழும்பு, ஏப்.10

**இலங்கையின் தேயிலை விற்பனை சராசரி விலையானது கடந்த மார்ச் மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று போர்ப்ஸ் மற்றும் வோக்கர் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.**

கடந்த மார்ச் மாதத்தில் ஒரு கிலோகிராம் தேயிலையின் சராசரி விலை 1,144.23 ரூபாவாக (3.63 டொலர்) பதிவாகியுள்ளது. இது பெப்ரவரி மாத விலையான 1,152.11 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 7.88 ரூபா சரிவாகும். 2025 மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது, ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை 39.53 ரூபாவால் வீழ்ச்சியடைந் துள்ளது. 2026ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான தேசிய சராசரி விலை 1,153.25 ரூபாவாகும். இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 26.07 ரூபா குறைவானது.

உலகளாவிய ரீதியில் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்துள்ளமை மற்றும் விலை நிர்ணய மாற்றங்கள் காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (எ-இ)



## தங்கத்துக்கு மீண்டும் மவுசு

கொழும்பு, ஏப்.10

உலக சந்தையில் தங்கம் மற்றும் வெள்ளியின் விலை நேற்றுப் புதிய உச்சத்தைப் பதிவு செய்துள்ளது. சர்வதேச சந்தைத் தரவுகளின்படி, ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலை 4,721.52 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. வெள்ளி ஒரு அவுண்ஸ் 73.55 டொலராக விற்பனை செய்யப்பட்டது.

மத்திய கிழக்குப் போர்ச்சூழலால், பிராந்திய ரீதியான அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடாக தங்கத்தை நோக்கி நகர்வது இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மின்னல் தாக்கி யுவதி உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.10


வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஹந்தபனாகல பகுதியில் மின்னல் தாக்கியதில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மழை பெய்துகொண்டிருந்த வேளையில் வீட்டின் அருகிலுள்ள விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த தனது தாய் மற்றும் தந்தைக்குக் குடையைக் கொடுக்கச் சென்ற போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (எ-41)

## 17 பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 17 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு உட்பட்டு, பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைவாக இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (க-இ)




## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.10

உலகளாவிய எரிசக்திச் சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது. டபிள்யூ.ரி.ஐ. ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 97.85 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. சர்வதேச ரீதியில் அதிகம் பயன்படுத்தப்படும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 97.61 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

மசகு எண்ணெய்யைத் தொடர்ந்து இயற்கை எரிவாயுவின் விலையிலும் நேற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடுகளின் உள்நாட்டு விலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

நாளை
சனிக்கிழமை - பங்குனி 28
11.04.2026
சுபநேரம் : 03.06 - 04.36
ராகுகாலம் : 09.06 - 10.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கேப்பாப்பிலவுக் காணிகளை விடுவிக்க இராணுவத்தினருடன் விரைவில் பேச்சு



## ஜனாதிபதி தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஏப்.10**

**கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்விகக் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளநிலையில், அதுதொடர்பில் விரைவில் இராணுவத்தினருடன் கலந்துரையாடப்படும் என்று ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.**

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது–

நாடாளுமன்றக்குழு அறையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில், கேப்பாப்பிலவுக் காணி விடுவிப்பு விடயத்தில், இராணுவத்தினரிடமிருந்து முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளுக்கு மாற்றீடாக 44 காணி உரிமையாளர்களுக்கும் மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தாலும், 11 பேருக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்படவில்லை என்று ஜனாதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டது. 1818ஆம் ஆண்டளவிலிருந்து கேப்பாப்பிலவில் மக்கள் குடியிருந்தமைக்கான வரலாறுகள் இருக்கின்றன என்ற விடயத்தை நான் சுட்டிக்காட்டினேன். இன்னும் 55 பேருக்குரிய 59.9 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே காணிகளை உடனடியாக விடுவிப்புச்செய்து, மக்களை அங்கு மீளக்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். இதுதொடர்பில் இராணுவத்தினருடன் கலந்துரையாடி, விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்-என்றார். (க-246)

# முழங்காவில் ம.வித்தியில் 14 மாணவர்களுக்கு ‘3ஏ’

கிளிநொச்சி, ஏப்.10

கிளி/ முழங்காவில் மகாவித்தியாலயத்தின் 14 மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

கணிதப்பிரிவில் ச.சங்கீர்த்தனன் 3ஏ பெற்று மாவட்டமட்டத்தில் 3ஆம் நிலையையும், வர்த்தகப் பிரிவில் 3ஏ பெற்று பு.அஜித் மாவட்ட மட்டத்தில் 3ஆம் நிலையையும், பா.தனுசாழினி 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 3ஆம் நிலையையும், கலைப்பிரிவில் பை.சிவதாரணி 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 8ஆம் நிலையையும், ஜோ.அஸ்வினி 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 14ஆம் நிலையையும், ச.துஜிதிகா 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 16ஆம் நிலையையும், மு.தருசாந் 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 21ஆம் நிலையையும், வி.சுஜீபா 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 26ஆம் நிலையையும், மு.தருசாயினி 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 32ஆம் நிலையையும், து.கிந்துஜா 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 34ஆம் நிலையையும், செ.விதுசனா 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 45ஆம் நிலையையும், பி.குணசீலி 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 74ஆம் நிலையையும், யே.அமலஜெனேதா 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 76ஆம் நிலையையும், ஞா.கலையரசி 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 80ஆம் நிலையையும் பெற்றுள்ளனர். (41-159)

# தென்பகுதி வியாபாரிகள் வடக்குக்கு படையெடுப்பு

*யாழ்ப்பாணம், ஏப்.10*

*எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, தென்பகுதியிலிருந்து நடைபாதை வியாபாரிகள் வடக்கு மாகாணம் நோக்கிப் படையெடுத்துள்ளனர். யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள வியாபாரிகள் முற்றவெளியில் உடுபுடவைகளை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியுள்ளனர்.*

*வழமைபோன்றே இம்முறையும் நடைபாதை வியாபாரிகளுக்காக முற்றவெளி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பகுதி யில் கொட்டகைகளை அமைத்து வியாபார நடவடிக்கைகளை சில வியாபாரிகள் இன்று ஆரம்பிக்கவுள்ளனர். (க-17)*

# கரப்பந்தாட்ட லீக் சுற்றுப்போட்டியில் 4 அணிகள் அரையிறுதிக்குத் தெரிவு

வல்வெட்டித்துறை கோடைகால பெரு விளையாட்டு விழாவில், ஆண்களுக்கான கரப்பந்தாட்ட லீக் சுற்றுப்போட்டியில், திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்திய 8 கழகங்களில், புள்ளிகளின் அடிப்படையில் 4 அணிகள் அரையிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன. குழு ஏ பிரிவில் கெருடாவில் ஐக்கியம் மற்றும் கருணாகரன் அணிகளும், குழு பி பிரிவில் வல்வை ஆதிசக்தி மற்றும் கெருடாவில் அண்ணா அணிகளும் அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ளன. (க-100)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இரண்டு அஞ்சல் வாகனங்கள்

முல்லைத்தீவு, ஏப்.10

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இரு அஞ்சல் பரிவர்த்தனை வாகனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வெகுசன ஊடகப்பிரதியமைச்சர் கலாநிதி கௌஷல்யா ஆரியரத்னவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த வாகனங்கள் கிடைக்கப் பெறவுள்ளன. அதற்கமைவாக வவுனியா தபால்நிலையத்திலிருந்து தலைமன்னார் தபால்நிலையம் வரையிலும், வவுனியா தபால்நிலையத்திலிருந்து முல்லைத்தீவு தபால்நிலையம் வரையிலும் தபால்களைக் கொண்டுசெல்வதற்காக இரண்டு அஞ்சல் பரிவர்த்தனை வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வெகுசன ஊடகப் பிரதி அமைச்சரால், நாடாளுமன்ற உறுப்பினர் துரைரசா ரவிகரனுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. (க-246)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எதிரிகள்வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றபடி வழக்கமான பணிகளில் பிரச்சினை எதுவுமிருக்காது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள்வழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் சிறு சலனம் ஏற்பட்டு நீங்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு ஏற்படும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கன்னி:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை.

**துலாம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். தந்தைவழியில் அனுகூலப் பலன்கள் ஏற்படும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**கும்பம்:** இன்று சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தெய்வ வழிபாட்டின் மூலம் பிரச்சினைகளைச் சமாளித்து விடுவீர்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



## கலாவதி தம்பிஜயா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம் சந்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கலாவதி தம்பிஜயா அவர்கள் கடந்த (07.04.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசாமி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், குமாரசாமி - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி தம்பிஜயாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, ஆனந்தராஜா, ஜெயராஜா, சிவராஜா மற்றும் பிரகாசவதி, கருணாவதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சிதம்பரபிள்ளை, கமலாம்பிகை, கனகசபை, அன்னலிங்கம், விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனியும், தமிழேந்தி (ஆசிரியை - கொ/புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயம், கொழும்பு - 14), றமேஸ் (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்), திருமகள் (ஆசிரியை - கள/புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், வத்தளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கண்ணன், வசந்தினி, தர்சினி காலஞ்சென்ற பாலகுமார் ஆகியோரின் மாமியாரும், வேணுகி, ஜனுரன், அக்ஷயா ஆகியோரின் அம்மம்மாவும், சிந்துஜா - காண்டீபன், சிந்துபன், சியாந்துபன், ஜெவின், வசினா, யாதுரி ஆகியோரின் அப்பம்மாவும், மீரனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைப்பறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 11.06.1944

இறப்பு 07.04.2026

சந்தை வீதி,
கொடிகாமம்.

தகவல் :
குடும்பத்தினர்
கண்ணன் - 070 755 8275

(CS/61182) J-1

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை மகேஸ்வரன்

20/3 புங்கன் குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த சின்னத்துரை மகேஸ்வரன் அவர்கள் கடந்த (07.04.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், ராதிகா (மயூரா - பிரான்ஸ்), அகிலன் (மயூரன்), மகிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாபரன் (பிரான்ஸ்), டிலோயினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற தனலட்சுமி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற யோகநாதன் (ஜேர்மன்), மனோரஞ்சிதம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான பாக்கியநாதன், பாலகுமார் மற்றும் செல்வராஜா (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மானசன், லக்சியன், பவிசன் (பிரான்ஸ்), விஹான், கிஷானா, ஐஸ்வினா, டிஷ்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 17.02.1953

மறைவு 07.04.2026

20/3 புங்கன் குளம் வீதி,
கொழும்புத்துறை.

தகவல் : குடும்பத்தினர்
021 221 6571

(CS/61181) J-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நீர்ப்பறவைத் திரைப்படம் இலவச காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் ஒழுங்கமைப்பில், நீர்ப்பறவைத் திரைப்படம் இலவசமாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளது. அம்மன் வீதி கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தக இல்லத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திரைப்படம் காட்சிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



# கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 2,409 ஏக்கரில் சிறுபோகம்

மன்னார், ஏப்.10

மன்னார் மாவட்டத்தின் முக்கியமான குளங்களில் ஒன்றான கட்டுக்கரைக் குளத்தின்கீழ் இம்முறை 2 ஆயிரத்து 409 ஏக்கரில் சிறுபோகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கடந்த காலங்களில் 10:1 என்ற அடிப்படையில் பயிர்ச்செய்கை நடைபெற்றது. எனினும் குளத்தின் கட்டுமானப்பணிகள் மற்றும் டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்களைக் கருத்திற்கொண்டு, இந்த முறை 13:1 என்ற விகிதாசார அடிப்படையில் நீர் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக ஜூன் மாதத்தில் தொடங்கும் பயிர்ச்செய்கை, குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக, இந்த முறை ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டு, ஜூன் மாதத்துக்குள் அறுவடை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதேவேளை விவசாயிகளுக்கான மானியம் 25 ஆயிரம் ரூபாவிலிருந்து 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தேவையான யூரியா மற்றும் ஏனைய உரங்களை விவசாயிகளுக்கு விரைவாக விநியோகிக்கத் தேவையான கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த முறை சிறுபோக நிலங்கள் உரிய விவசாயிகளுக்கு மட்டுமே பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப்போன்று பொது அமைப்புகள், கோயில்கள் அல்லது தேவாலயங்களுக்கு ஒதுக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பைத் தவிர்த்து, மேலதிக இடங்களில் சட்டவிரோதமாக பயிர் செய்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே 18 விவசாயிகளுக்கு எதிராக நீதிமன்றம் மூலம் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு அதிகபட்ச தண்டம் விதிக்கப்படுவதோடு, விவசாய அமைப்புகளில் இருந்து தடைசெய்யவும் பரிந்துரைக்கப்பட்டது. விவசாயிகள் நீதிமன்றம் செல்லாமல் தங்களுக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள நியாய சபை மாதம் ஒருமுறை மன்னார் மாவட்டத்தில் இயங்கிவருகிறது. எதிர்காலத்தில் இதற்கு நிரந்தர நீதிபதி ஒருவரை நியமிக்கவும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. (க-56)



சாவகச்சேரிப் பிரதேசசபையின் உறுப்பினர் இராசேந்திரம் சுதாகர் பதவி வழி சமாதான நீதிவானாக கடந்த திங்கட்கிழமைசத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற கௌரவ நீதிபதி நளினி சுபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டார். (41-159)

# சேவை பாராட்டும் வரவேற்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப்.10



இராமாவில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பும், சிறுவர் கழகமும் இணைந்து நடத்திய இடமாற்றம் பெற்றுச் சென்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான சேவைநலன் பாராட்டு மற்றும் புதிதாகக் கடமையைப்பொறுப்பேற்றுள்ள சமுர்த்தி உத்தியோகத்தருக்கான வரவேற்பு நிகழ்வு இராமாவில் முருகன் ஆலய வளாகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர் திருமதி இ.தவமலர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக இராமாவில் கிராம அலுவலர் செ.மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.மலர்மதி, இராமாவில் கந்தசாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ குகராசக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் இராமாவில் கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.துபேந்திரன் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து தங்கப்பவுண் சங்கிலி மற்றும் நினைவுப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து புதிதாகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் த.கிருபாகரன் பொன்னாடை போர்த்தி, மாலைகள் அணிவித்து, நினைவுப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (க-159)



# தூர்வாரப்பட்டது மருதடி வெள்ளவாய்க்கால்

யாழ்ப்பாணம், ஏப்.10

பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட மருதடிப் பகுதியிலிருந்து பிரதான வீதிக்கான இணைப்பு வீதியாக பயன்படுத்தப்பட்டுவரும் வெள்ளவாய்க்காலைத் தூர்வாரும் பணி நேற்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. நகரசபையின் உபதவிசாளரும் சுகாதாரக்குழுத் தலைவருமான தேவசிகாமணி தேவராஜேந்திரன் மேற்பார்வையில் நகரசபையின் துப்புரவுப்பணியாளர்களினால்தூர்வாரும்பணிகள்முன்னெடுக்கப்பட்டன. (ஏ-41-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறுதிப் பந்துவரை பரபரப்பு

# கொல்கத்தாவை வீழ்த்தி லக்னோ முன்னேற்றம்!



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், கொல்கத்தாவை இறுதிப் பந்தில் வீழ்த்தியது லக்னோ.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லக்னோ களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரகுவன்சி 45 ஓட்டங்களையும், அணித்தலைவர் ரகானே 41 ஓட்டங்களையும், றோமன் பவல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணியின் இன்னிங்ஸ் ஆரம்பம் முதல் மந்தமாகவே அமைந்தது. மிச்செல் மார்ஷ் 15, மார்க்கம் 22, பன்ட் 10, பூரன் 13 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதனால், லக்னோ அணியின் தோல்வி உறுதியாகிக்கொண்டிருந்தது. எனினும், மத்திய வரிசை வீரரான ஆயுஸ் படோனி 34 பந்துகளில் 54 ஓட்டங்களைப்பெற்று நம்பிக்கை வழங்கினார். கடைசிக்கட்ட அதிரடியைக் கையிலெடுத்தார் முகேஸ் சவுத்ரி. இறுதி ஓவரில் 14 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், இரண்டு சிக்சர்களைப் பறக்கவிட்டு அந்த ஓட்டங்களைப் பெற்று அணியை இறுதிப் பந்தில் முகேஸ் சவுத்தி வெற்றி பெற வைத்தார். 27 பந்துகளில் 54 ஓட்டங்களைப் பெற்ற அவர் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ம)

# பிணைமுறி மோசடியை விட நிலக்கரி மோசடியால் நட்டம்

மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.10

பிணைமுறி மோசடியால் ஏற்பட்ட நட்டத்தைக் காட்டிலும் தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது எனநாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆளும்தரப்பு உறுப்பினர்களின் முறையற்ற செயற்பாடுகளால் நெருக்கடிகள் ஏற்படும்போது ஜனாதிபதி ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்றத்துக்கு வந்து அரசாங்கத்தைத் தூய்மைப்படுத்துகின்றார்.

தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதனால் மின்னுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் கூறிய போது ஜனாதிபதி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தற்போது கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் ஜனாதிபதி உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அப்போதைய ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுன தோற்கடித்தது. ஆனால் நீதிமன்றம் கெஹெலிய ரம்புக்வெலவைத் தண்டித்தது. குமார ஜயகொடியின் விவகாரத்திலும் அதுவே நடக்கும் - என்றார்.

(எ-இ)

# நாடு திரும்பினார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஏப்.10

மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்த முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, தனது சிகிச்சைகளை முடித்துக்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

சிங்கப்பூரில் உள்ள பிரபல மருத்துவமனை ஒன்றில் கடந்த மாதம் 19ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிகிச்சையின் பின்னர் சில நாள்கள் அங்கு தங்கியிருந்து ஓய்வுபெற்ற அவர், தற்போது பூரண குணமடைந்து நாடு திரும்பியுள்ளார். (எ-இ)

SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

STEP INTO THE WORLD OF COMPUTING & BUSINESS!

DEGREE PROGRAMS IN

BSc(Hons) in
- Artificial Intelligence & Robotics
- Cyber Security
- Computer Science
- Information Technology
- Software Engineering
- Computer Networking


BSc(Hons) in
- Business Management
- Business Management with Business Analytics
- Business Management with Digital Marketing

ONLY 1 A/L'S PASS NEED TO APPLY!

CONTACT VIA WHATSAPP 077 147 1471
Visit our Website

021 7534 807
northernuni.lk
admissions@northernuni.com

# காணவில்லை



**கந்தையா விஜயதேவன்**

**(ஓய்வுபெற்ற பதிலதிபர் - ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்)**

இப்படத்தில் உள்ள இணுவில் தெற்கை சேர்ந்தவரான கந்தையா விஜயதேவன் என்பவர் கடந்த (04.04.2026) சனிக்கிழமை நள்ளிரவு 12.25 மணியில் இருந்து காணவில்லை. இவரை கண்டவர்கள் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

வாகன விபரம் - Honda Superhup 90 - நிறம் கடும் பச்சை

குறிப்பு - எந்தவித மனநலப் பிரச்சனைகளும் அறியப்படவில்லை.

மனைவி - சுதாகரி
076 330 6837
077 139 3632

(CS/61179)J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்சாரக் கட்டணத்தை மீள அதிகரிக்கத் திட்டம்

## குற்றஞ்சாட்டுகின்றார் சஜித்

கொழும்பு, ஏப்.10

மீண்டும் 30 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அரசாங்கம் 41.5 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கிறது. அதில் 20.5 பில்லியன் ரூபா மூலம் தரம் குறைந்த நிலக்கரி மோசடியால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தரம் குறைந்த நிலக்கரியால் 250 கிகாவாட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளது. அதை ஈடுசெய்ய டீசல் மின் நிலையங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்வதற்கு 20.5 பில்லியன் ரூபா தேவை . இந்த நட்டத்தை நிறுவனங்களிடம் இருந்து அறவிடுவோம் என்று ஜனாதிபதி கூறினாலும் உண்மையில் 75 இலட்சம் மின்சாரப் பாவனையாளர்களே இதை செலுத்த வேண்டிவரும். உலக சந்தையில் எண்ணெய் விலைகள் குறைந்து காணப்படுகின்றன. மத்திய கிழக்குப் போர் என்ற பெயரில் அதிகரிக்கப்பட்ட எண்ணெய் விலைகளை குறைக்க வேண்டும். அந்தச் சலுகையை மக்களுக்குப் பெற்றுக் கொடுங்கள்-என்றார். (எ)

# நேபாள பிரதமரை சந்தித்தார் இலங்கைத் தூதுவர்

நேபாளம், ஏப்.10

நேபாளத்திற்கான இலங்கைத் தூதுவர் ருவந்தி தெல்பிட்டிய, காத்மண்டுவைத் தளமாகக் கொண்ட ஏனைய தூதரகத் தலைவர்களுடன் இணைந்து நேபாளப் பிரதமர் பாலேந்திர ஷாவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு சிங் தர்பாரில் உள்ள நேபாளப் பிரதமர் மற்றும் அமைச்சரவை அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல்கள் மற்றும் அதில் பிரதமர் பெற்ற வெற்றி தொடர்பில் தூதுவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 06 . 1935

மறைவு 07 . 04 . 2026

## திருமதி யோகேஸ்வரி சிவகுமாரன்

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த யோகேஸ்வரி சிவகுமாரன் (நேசம்) அவர்கள் 07.04.2026 அன்று கொழும்பில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுமாரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - சோதிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சுப்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரட்ணம், காலஞ்சென்ற அருணகிரிநாதன், காலஞ்சென்ற கணேசரட்ணம், காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் தங்கராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, குமார் (Switzerland), விக்கினேஸ்வரி (Germany), சந்திரகுமாரன் (Germany), சிவயோகமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகேந்திரன், ரவீந்திரன், மைதிலி, யோகேஸ்வரன், பாமா, வசீகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சஞ்சீர், மதுசங்கர், கௌரிசங்கர், உமாசங்கர், செந்தூரன், அபிராமி, சதுர்ஷன், சுருதி, வினுயா, விதுஷன், லக்ஷன், நிவேதா, அபினேஷ், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், துளசி, சதிஷ்கா, சுரஜா, கவித்ரா, குகப்பிரசாத், அரிஷானா, கிரிஜெயந்த் ஆகியோரின் பாசமிகு மணமுறை பேர்த்தியாரும், ஸ்ரீஷன், ஆத்மிரா, மாறன், மிர்த்விக் கிஷன், ஆராத்யா ஆகியோரின் அன்புப்பூட்டியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (11.04.2026) சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.00 மணிவரை பொரளை **A.F. Raymond** மலர்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைச்சடங்குகள் 12.04.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 1.30 மணிக்கு பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**கௌரிசங்கர் (பேரன்)-077 899 4149**
**செந்தூரன் (பேரன்)-077 587 3397**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 31583) A

# மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 01 . 1936

இறப்பு 06 . 04 . 2026

## திருமதி நாகலிங்கம் வன்னமணி

பாரதி வீதி, நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் வன்னமணி 06.04.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மருதர் நாகலிங்கம் (ஓய்வுபெற்ற கூட்டுறவு கணக்கு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சூரியர் மாணிக்கம் - இலட்சுமி தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான மருதர் - சீதேவி தம்பதியரின் மருமகளும், குலேந்திரன் (செல்வம் - ஜேர்மனி), மைத்திரேயி (ஜேர்மனி), சந்திரிக்கா (வவா), புவனேந்திரன் (இந்திரன் - பிரான்ஸ்), கௌரிமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், கௌரி (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற அன்பழகன் (சின்னக்கிளி) மற்றும் நிலாவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகவி, சௌமியா, டிவாகர், டிலானி, சானுஜா, டனுஷாந், கிரிஷாந், மதுஷாந், பிரஷாந், வினுஷா, விவேக்கா, பிரஷாளினி, ஆரங்கன் ஆகியோரின் பேர்த்தியும், ரோனியின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பசுபதி, தம்பிராசா, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா, இராசபூபதி, கதிரவேல், ஆறுமுகம், வள்ளிப்பிள்ளை மற்றும் பூபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2026) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாரதி வீதி, நயான்மார்கட்டு.**
**077 3534 570**

**தகவல்: குடும்பத்தினர்.**

# 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 31 . 03 . 1923

அம்மன் மடியில் 02 . 04 . 2004

## அமரர் பண்டாரி வேலாயுதம்

**(மட்டுவில் தெற்கு சாவகச்சேரி வேரற் கேணியடி)**

**திதி: 10.04.2026**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி வேரற் கேணியடி.**

(CS/31653) J-1

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org | noolaham.media

# தனிச் சிங்களத்தில் இ.போ.ச. படிவங்கள்

## பொதுமக்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப். 10
இலங்கை போக்குவரத்துச் சபையின் 764ஆம் இலக்க பாடசாலை சேவை தொடர்பில் அனுப்பப்பட்ட விண்ணப்பக் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அச்சிடப்பட்டுள்ளமை பாடசாலை வட்டாரங்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகள் என்ற வகையில், கடிதங்கள் தமிழில் அனுப்பப்பட வேண்டும் என்பதே அரசியலமைப்பு விதியாக உள்ளது. இவ்வாறான நிலையில், சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக தனிச்சிங்கள மொழியில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டமைக்கு பாடசாலைகளின் அதிபர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். தமிழில் அல்லது ஆங்கில மொழியில் விண்ணப்பப் படிவங்களை அனுப்புமாறு அவர்கள் துறைசார் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளனர். (ம-26)

### அன்னை...

ஆரம்பமானது. நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி முன்பாக நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்தே ஊர்திப்பவனி இடம்பெற்றது.

அன்னை பூபதியின் ஊர்திப் பவனி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களின் பல்வேறு இடங்களையும் வலம்வந்து எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் உள்ள அவரின் நினைவிடத்தைச் சென்றடையும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

### ஆடைகளைக்...

சிறுவனின் சகோதரனுக்கும், தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறுவனின் சகோதரனைப் பழிவாங்கும் நோக்கிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இன்னொரு சந்தேகநபர் தேடப்பட்டு வருகின்றார். அவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26-27)

### லஞ்சமாக...

விசாரணை ஆணைக்குழுவால் நேற்றையதினம் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அந்த அதிகாரியிடம் தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவரை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-113)

### அரசாங்கத்தைக்...

எண்ணுகின்றனர். பொருளாதார வீழ்ச்சி, இனவாதம் என்பவற்றை வைத்து அரசாங்கத்தை எப்படியாவது கவிழ்க்க வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாக உள்ளது. குறுக்கு வழியில் அரசாங்கத்தைக் கவிழ்க்கலாம் என எதிர்க்கட்சிகள் எண்ணினால் அது கனவாகவே அமையும்.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக நாட்டில் வரிசை யுகங்கள் ஏற்பட வேண்டும் என்று எதிரணி உறுப்பினர்கள் சிலர் காத்திருக்கின்றனர். இன்னும் சிலர் காலநிலை மாற்றத்தை வைத்தாவது, மக்களை வீதிக்குக் களமிறக்கி ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா? என்று சிந்தித்து வருகின்றனர். இத்தகைய வீண் முயற்சிகளைக் கைவிடுமாறு எதிர்க்கட்சிகளை நாங்கள் கோருகின்றோம்.

அனைத்துச் சவால்களையும் நாங்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டு வருகின்றோம். பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் சக்தியும் வல்லமையும் அரசாங்கத்துக்கு உள்ளதால், எத்தகைய நிலைமையையும் எதிர்கொள்ளத் தயார் - என்றார். (அ-ம-44)

### இந்திய...

மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி - இரணைதீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 10 பேர், இலங்கைக் கடற்படையால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் கிளிநொச்சி நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், நேற்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே, இந்திய மீனவர்கள் பத்துப் பேரையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-113)

### நம்பிக்கையில்லாப்...

பட்டுள்ளது. இதற்கு எதிரான விவாதமே நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

பிரேரணையை தோற்கடிப்பதற்குரிய பெரும்பான்மைப் பலம் ஆளுங்கட்சி வசம் இருப்பதால் அது தோல்வி அடையும் என்பது உறுதி. எனினும், தரமற்ற நிலக்கரி இறக்குமதிமூலம் இடம்பெற்றுள்ள மோசடியை வெளிப்படுத்துவதே இதன் முதன்மை நோக்கம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது. பிரேரணை மீதான வாக்கெடுப்பு, இன்று மாலை 5.30 மணியளவில் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### அவசரகாலச்...

முறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பில் உரையாற்றும்போதே, அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுக்கும் நோக்கிலேயே அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக அரசாங்கம் கூறும் காரணத்தை ஏற்க முடியாது.

தேசிய மக்கள் சக்தியினர் எதிரணியில் இருந்தபோது, அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்கவில்லை. அவசரகாலச் சட்டத்துக்குக் கடும் எதிர்ப்பையே முன்வைத்து வந்தனர். அன்று அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தவர்கள் தற்போது அதை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதை நாங்கள் கண்டிக்கின்றோம் - என்றார். (அ-ம-44)

### மேலும்...

பான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட நிலையிலேயே, 110 மேலதிக வாக்குகளால் அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 137 உறுப்பினர்களும், எதிராக 27 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி, பொதுஜன பெரமுன உள்ளிட்டவை எதிராக வாக்களித்தன. (அ-ம-44)

### சகோதரன்...

பெற்றுள்ளது. செக்கடிப்பிலவு கிராமத்தைச் சேர்ந்த பவளரத்தினம் செல்வமலர் (வயது-56) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மதுபோதையில் நின்ற சகோதரன் கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அந்தப் பெண் அயலவர்களால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் மேலதிக சிகிச்சையின் போது உயிரிழந்தார்.

சந்தேகநபர் பூவரசன்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அந்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110)

### தமிழர்களின்...

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான இரண்டாவது கலந்துரையாடல் கொழும்பில் நேற்று நடைபெற்றது. தமிழ் மக்களின் அரசியற் தீர்வாக முன்னிறுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன. இந்த விடயத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் பொதுவான இணக்கப்பாடுகள் காணப்பட்டன.

இதையடுத்தே, அனைத்துக் கட்சிகளாலும் ஏற்கப்பட்ட அம்சங்களை அடிப்படையாக வைத்து, நிபுணத்துவ உதவியுடன் தீர்வுத் திட்டமொன்றை வரைவதற்கு விசேட வரைவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவுக்குழுவில் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான ரனித்தா ஞானராஜா, மரியதாஸ் யூட் டினேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிபுணத்துவக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி க.கனக ஈஸ்வரன், பேராசிரியர் எம்.சொர்ணராஜா, பேராசிரியர் என்.செல்வக்குமாரன், பேராசிரியர் வி.ரி.தமிழ்மாறன், சிரேஷ்ட விரிவுரையாளர் என்.சிவக்குமார், கலாநிதி கே.குருபரன் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாநாட்டில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் தலா ஓர் உறுப்பினர் வரைவுக்குழுவில் இடம்பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, இதற்கு முன் பல்வேறு கட்சிகளும் சிவில் அமைப்புகளும் பலவரைவுகளைமுன்வைத்துள்ளன. எனினும், அனைத்துக் கட்சிகளாலும் ஏற்கக்கூடிய வரைவை முன்வைப்பதே தற்போதைய முன்னெடுப்பின் நோக்கம் என்றும் நேற்றைய கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோட்டத் தொழிலாளர்களுக்கு

# 50 இலட்சம் ரூபா செலவில் புதிய வீடமைப்புத் திட்டம்!

**கொழும்பு, ஏப்.9**

**இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படக்கூடிய அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்காகப் புதிய வீடமைப்புத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய, 650 சதுர அடி பரப்பளவைக் கொண்ட நவீன வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்றும், ஒவ்வொரு வீட்டுக்கும் 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தற்போது பணிபுரியும் தோட்டங்களிலேயே பாதுகாப்பான இடங்களில் தலா 10 பேர்ச்சஸ் காணி இதற்காக வழங்கப்படும். மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் ஏனைய பொதுக்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் அரசாங்கத்தினால் செய்துகொடுக்கப்படும். மண்சரிவு அபாயம் காரணமாகத் தமது வீடுகளை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இழந்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அரச நிறுவனங்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. (ச-இ)

# வவுனியாவில் கோரவிபத்து ஓய்வுபெற்ற ஆசிரியர் பலி!



வவுனியா, ஏப். 10

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற கோர விபத்தில், ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

பாலகுகன் (வயது-64) என்ற முன்னாள் ஆசிரியரே உயிரிழந்தவராவார்.

சைக்கிள் பயணித்த அவர் மீது, லொறி மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. அவர் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்தார். (ம-110)

### வடக்கு மாகாண

# மாற்றுத்திறனாளிகளுக்கான பிரம்மாண்ட இசைப்போட்டி!

யாழ்ப்பாணம், ஏப்.10

மாற்றுத்திறனாளிக் கலைஞர்களின் இசைத்திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் விசேட வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசைப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. 11 ஆம் திகதி ஒட்டிசம், டவுன் சிண்ட்ரோம், செரிப்ரல் பால்சி, மெதுவாகக் கற்போர் ஆகியோருக்கும் 12ஆம் திகதி பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்குமான போட்டிகள் நடைபெறும். தனிநபர் நிகழ்ச்சிகள் மட்டுமே அனுமதிக்கப்படும். போட்டியாளரின் நிலையை உறுதிப்படுத்தும் செல்லுபடியாகும் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

போட்டிகள் நடைபெறும் நாளன்று நண்பகல் ஒரு மணிக்கு முன்பாகப் பெயர்கள் பதிவுசெய்யப்படவேண்டும். போட்டியாளர்கள் கர்நாடக இசை, திரைப்படப் பாடல்கள் அல்லது மேற்கத்திய இசை எனத் தாம் விரும்பும் பாடல்களைப் பாடலாம். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதிகபட்சம் 6 நிமிடங்கள் மட்டுமே வழங்கப்படும்.

வாத்தியம் இசைப்போர் தமது சொந்தக் கருவிகளைக் கொண்டுவரவேண்டும். பின்னணி இசைப் பயன்படுத்துவோர் அதனை USB Drive இல் கொண்டு வருதல் அவசியம். போட்டியாளருடன்வரும் பாதுகாவலர் போட்டி முடியும் வரை அவருடன் இருத்தல் வேண்டும். போட்டியில் பங்கேற்கும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன், வெற்றியாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மேலதிக விவரங்களுக்கு 076 877 5188 அல்லது 077 902 5810 ஆகிய இலக்கங்களைத் தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அத்தியாவசியப் பொருள்கள் விலை பண்டிகைக் காலத்தில் உயராது!

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது. லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது என வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகை யில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கு நாடுகளில் தோற்றம் பெற்றுள்ள மோதல் நிலைமைகளினால் தேசியமட்டத்தில் எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். மத்திய கிழக்கில் மோதல் நிலைமை தொடங்கியவுடன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உற்பத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். கோதுமைமா உட்பட இனிப்பு உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கப் போவதில்லை என்று உற்பத்தியாளர்கள் உறுதியளித்துள்ளார்கள். பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறித்து விசேட அவதானம்செலுத்தப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார். (ச-இ)

**வேலைவாய்ப்பு**

சுத்திகரிப்பாளர் - கிளீனிங் வேலை
ஆண் : காலை 10 முதல் இரவு 10 வரை
காலை 9 முதல் மாலை 6 வரை
சம்பளம் : 50000/- - 60000/- (மாதம்)
இடம் : K.K.S வீதி, இணுவில்
தொடர்பு:- 077 991 2628
(CS/61184) J-1

**மரண அறிவித்தல்**

மண்ணில் மலர்வு 24 . 07 . 1935



விண்ணில் உதிர்வு 05 . 04 . 2026

**அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ்**

**(சின்னத்துரை)**

யாழ்ப்பாணம், குருநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ்(சின்னத்துரை) அவர்கள் கடந்த 05.04.2026 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை றோசம்மா (அன்னமுத்து) தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான மாணிக்கம் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மரியராணி (நாகம்மா) அவர்களின் பாசமிகு கணவரும், லொறைன் யுஸ்ரினா கொண்சி (ஜேர்மனி) மேரி மாகிரெற் (மேசி) (நோர்வே), ஜோண்சன் (சுவிஸ்), மேரி கலிஸ்ரஸ் ஜொய்சி (ஜேர்மனி) ஜான்சி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியதாஸ் (குமார்), ஜோசப் (காந்தி), கிறிஸ்ரினா (சூரி), காந்தரூபராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா (லில்லி), பர்னாந்து (சேவியர்), பிலோமினா (றோஸ்), பிலிப் (சின்னராசா). ஜோசப் (புஸ்பராசா ) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலம்சென்றவர்களான அலோசியஸ், நவமணி, தவரட்ணம் மற்றும் அன்னமலர், வரதராணி காலஞ்சென்றவர்களான சித்திரவேல், வடிவேல், தர்மன், வைரவப்பிள்ளை (துரை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் லக்க்ஷ்மி, காலஞ்சென்ற தங்கமுத்து மற்றும் நாகரத்தினம் ஆகியோரின் அன்பு சகலனும், கரோலின் ஒலிவியா இராகுலன், மரியராகவர்த்தனி (ராகா) சுஜித், ஸ்ரியான் அமிர்தவர்ஷன், மகிழந்தன், அன்பகா, மறியோ பிரியந்தன், நிரோசி, டினோ நிஷாந்த் ஆன்மிதுனா, மரிய சாரங்கா, மார்க்கஸ், தூரிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், இசை, வியா,நிலன், மீனா, ஜெனி ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் நாளை 11.04.2026 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, புதிய பூங்கா வீதி, குருநகர்.

தகவல்: குடும்பத்தினர்
004798426159,
077 189 4261

(CS 31585)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.